# செய்யுள் திரட்டு

## தமிழ் இளநிலைப் பகுதி – 1



**தமிழாய்வுத் துறை**

மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரி (தன்னாட்சி B+)

புதுக்கோட்டை – 622 001.

# பாடத்திட்டம்

## முதற்பருவம்

**அலகு - 1** SU

1. பாரதியார் -1. தமிழ்த்தாய்
   -2. வந்தேமாதரம்
2. பாரதிதாசன் -1. அழகு
   -2. தோழனே உன்னிடம் சொல்வேன்
3. கவிஞர் முடியரசன் -1. தலைமை வகிப்போம்
4. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் -1. மனிதனாக வாழ்ந்திட வேணும்

**அலகு - 2** SJ

5. கண்ணதாசன்- 1. நீ மணி; நான் ஒலி!
6. நா. காமராசன்- 1. காகிதப் பூக்கள்
7. மீரா - 1. எதிரொலி
   2. கடமையைச் செய்
8. கந்தர்வன்- 1. புதியகல்வி
9. அப்துல் ரகுமான்- 1. கனவு
10. வைரமுத்து- 1. எப்போது உருப்படும் இந்த தேசம்

**அலகு - 3** SS

உரைநடை முதற்பருவம்

**அலகு - 4** NH

இலக்கணம்

1. எழுத்து-
   1. உயிரெழுத்து (குறில், நெடில், மாத்திரை) NH
   2. மெய்யெழுத்து-
   (1. வல்லினம், 2.மெல்லினம், 3. இடையினம்)
   3. சார்பெழுத்துக்கள்
2. தொடர்ப்பிழைநீக்கம்
   ண, ந, ன வேறுபாடு
   ர, ற வேறுபாடு
   ல, ழ, ள வேறுபாடு
3. வல்லினம் மிகும், மிகா இடங்கள்

**அலகு - 5** NH

இலக்கிய வரலாறு

பாரதியார், பாரதிதாசன், கவிஞர் முடியரசன், பட்டுக்கோட்டை, கண்ணதாசன், புதுக்கவிதைக் கவிஞர்கள், உரைநடை இலக்கியம்.

# தமிழ் இலக்கணம்

தமிழ் இலக்கணம் ஐந்து வகைப்படும். அவை, எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பனவாகும்.

## I எழுத்து இலக்கணம்:

பேசும் போது எழும் ஒலி அணுக்களின் (அணுத்திரளின்) கூட்டம் எழுத்து எனப்பெறும். எழுத்து -களுக்கு ஒலி வடிவம், வரிவடிவம் என்னும் இருவடிவங்கள் உண்டு. நாவால் உச்சரிக்கும்போது ஒலிவடிவமும், எழுதும் போது வரிவடிவமும் பெறும்.

எழுத்து முதலெழுத்து, சார்பு எழுத்து என இரண்டு வகைப்படும்.

### 1. முதல் எழுத்துக்கள்:

உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும், மெய்யெழுத்துக்கள் பதினெட்டும் ஆகிய முப்பது எழுத்துகள் முதலெழுத்துகளாகும்.

**உயிரெழுத்துகள் பன்னிரண்டு:**

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ

**மெய்யெழுத்துகள் பதினெட்டு:**

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்

உயிர்மெய் முதலிய பிற எழுத்துகளும் சொற்களும் மொழியும் தோன்றுவதற்கு முதற்காரணமாக உயிரும், மெய்யும் அமைவதால் இவை முதலெழுத்துகள் எனப்பெயர் பெறுகின்றன.

உயிர் எழுத்துகள் குறில், நெடில் என இரண்டு வகைப்படும். சொல்வதற்கு குறைந்த முயற்சியும் குறைந்த காலமும் தேவைப்படும் இவை.

குறைந்த மாத்திரை அளவுடைய அ, இ, உ, எ, ஒ, ஆகிய ஐந்தும் குறில் எனப்பெறும். இவற்றின் மாத்திரை அளவு தனித்தனியே ஒன்று. (மாத்திரை - ஓர் எழுத்தை ஒலிக்க - உச்சரிக்க - ஆகின்ற கால அளவு)

நெடில் எழுத்துக்களை சொல்வதற்கு அதிக முயற்சியும் அதிக காலமும் தேவைப்படும்.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ - ஆகிய ஏழு எழுத்துக்களும் ஒவ்வொன்றும் இரண்டு மாத்திரை அளவுடையன. இவை குறிலை நோக்க நீண்ட ஓசை உடையன. ஆதலால், நெடில் என்று குறிப்பிடப் பெறுகின்றன

க் முதல் ன் வரையுள்ள பதினெட்டு எழுத்துக்களும் மெய்யெழுத்துக்கள் எனப்படும். அவற்றுள், மெய் எழுத்து 3 வகைப்படும். அவை

க் ச் ட் த் ப் ற் - வல்லின மெய்கள்
ங் ஞ் ண் ந் ம் ன் - மெல்லின மெய்கள்
ய் ர் ல் வ் ழ் ள் - இடையின மெய்கள்

இவ்வாறு மெய்யெழுத்துக்கள் வல்லினம், மெல்லினம் இடையினம் என மூன்று வகைப்படும்.

உயிரும் உடம்புமாம் முப்பது முதலே' நன்னூல்-5
(உயிர் : உயிரெழுத்து ; உடம்பு = மெய்யெழுத்து

## (ii) சார்பெழுத்துக்கள்:

உயிர், மெய் ஆகிய முப்பது முதல் எழுத்துக்களைச் சார்ந்து வருவன சார்பெழுத்துக்கள் எனப் பெறுகின்றன. இவை தனித்து இயங்காது.

சார்பு எழுத்துக்கள் பத்து வகைப்படும். அவை, உயிர், மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம் என்பனவாகும்.

## 1. உயிர்மெய் (18×12 = 216) [உயிர் + மெய் = உயிர்மெய்]

எ.கா க் = மெய் ; அ = உயிர் ; க் + அ = (க) - உயிர்மெய்

எ.கா, க, கா, கி, கீ, (கு, கூ, ) கெ, கே, கை, கொ, கோ, கௌ.)

இவ்வாறு மெய்யும் உயிரும் கூடிப் பிறக்கும் எழுத்துக்கள் உயிர்மெய் என்றழைக்கப் பெறும். உயிரின் முதன்மை கருதியும் எளிமை கருதியும் உயிர்மெய் என்று அழைக்கப் பெறுகின்றன. பதினெட்டு மெய்களின் மேல் பன்னிரண்டு உயிர்களும் தனித்தனியே கூடிப்

∴ க என்ற எழுத்து 'அ' என்ற உயிரையும், 'க்' என்ற மெய் எழுத்தையும் சேர்த்து ஒலிப்பதனால் இது சார்பெழுத்தாகும்.

பெருக்க உயிர்மெய் எழுத்துகள் (18x12)=216 ஆகும்

2. ஆய்தம்

ஃ - என்ற எழுத்தே ஆய்த எழுத்து எனப்படுவது. இதனை அஃகு என்று கூறுவர். மூன்று புள்ளி வடிவில் எழுதப் பெறுவதால் இது முப்பாற்புள்ளி என்று அழைக்கப் பெறுகிறது.

இந்த எழுத்து உயிர் போலத் தனித்தும் இயங்காது. மெய் போல (க்+அ=க) உயிரோடு சேர்ந்தும் இயங்காது. எனவே, இது தனிநிலை என்றும் அழைக்கப்பெறும்.

இரண்டு பக்கமும் இரண்டு சிறகுகளைக் கொண்டு எழும் பறவையின் உடலைப் போல ஆய்த எழுத்து இரண்டு பக்கமும் இரண்டு எழுத்துகளாகக் கொண்டு இயங்கும் (தனக்கு முன் ஒரு குற்றெழுத்தையும், தனக்குப் பின் ஒரு வல்லின உயிர்மெய் எழுத்தையும் பெறும்).

(எ.கா) : அஃது, இஃது, பஃறி, கஃசு, எஃகு.

ஆக, தமிழ் எழுத்துகள் மொத்தம் 247.

அவை, உயிர் - 12
மெய் - 18
உயிர்மெய் = 216 (18x12)
ஆய்தம் = 1
247

3. உயிரளபெடை : சில இடங்களில் சில எழுத்துகள் நீண்டு ஒலிக்கும். அவ்வாறு ஒலிப்பதை அளபெடை என்பர். உயிர் எழுத்துகள் இவ்வியல் நீண்டு ஒலிப்பது உயிரளபெடை எனப்படும்.

(3) உயிர் நெட்டெழுத்து ஏழும் தம் இரண்டு மாத்திரை அளவிலிருந்து மிகுந்து மூன்று மாத்திரை அளவு ஒலிப்பது உயிரளபெடை என்று கூறப்பெறும். (உயிர் + அளவு + எடை, உயிர் அளவு (மாத்திரை அளவு) எடுத்தல்

எ.கா: ஓஒதல்
தூஉதல்
கொடுப்பதூஉம், தொழாஅன்

உயிரளபெடை மூன்று வகைப்படும். அவை,
அ. செய்யுளிசை (இசைநிறை) அளபெடை
ஆ. இன்னிசை அளபெடை
இ. சொல்லிசை அளபெடை என்பனவாகும்.

## அ. செய்யுளிசை அளபெடை (இசைநிறையளபெடை)

செய்யுளில் ஓசை (இசை) குறையும்போது அதை நிரப்புவதற்காக மொழிக்கு முதலிலும் இடையிலும் இறுதியிலும் நின்ற உயிர்நெடில் தன் மாத்திரை அளவிலிருந்து மிகுந்து ஒலிப்பது இசைநிறை (செய்யுளிசை) அளபெடை எனப்படும்.

(எ.கா) : தெய்வம் தொழாஅள் கொழுநன்

'தொழாள்' என்று இருந்தால் குறில்நெடில் இணைந்து ஒற்றடுத்து வந்த நிரையசையாக, ஓரசைச்சீராக செய்யுளில் நடுவில் வந்தது என குற்றம் வரும். அதனை நிறைவு செய்யும் வகையில் 'தொழாஅள்' என அளபெடுத்தது.

ஓஒதல் வேண்டும் - மொழி முதல் அளபெடை
கடூஉமணி - மொழி இடையில் அளபெடுத்தது.
படாஅ - மொழி இறுதியில் (கடையில் ״)

## ஆ. இன்னிசை அளபெடை

செய்யுளில் ஓசை (இசை) குறையாத இடத்தும் இனிய இசை தருவதற்காக அளபெடுப்பது இன்னிசை அளபெடை எனப்படும்.

(எ.கா) கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை

கெடுப் | பதூஉம் கெட் | டார்க் | கு

எடுப் | பதூஉம் எல் | லாம் - அளபெடுக்காவிட்டாலும் செய்யுள் ஓசை குறையாமல் இருக்கிறது. எனினும் இனிய ஓசை தருவதற்காக.

கெடுப்பதூஉம், எடுப்பதூஉம் - என அளபெடுக்கின்றன. எனவே, இவை இன்னிசை அளபெடையாகும்.

## இ. சொல்லிசை அளபெடை

சொல் + இசை + அளபெடை

சொல்லின் பொருளை மாற்றும் அளபெடை சொல்லிசை அளபெடை.

எ.கா: நசை - விருப்பம் - தொழிற்பெயர்
நசைஇ - விரும்பி - வினையெச்சம்

'நசை' என்னும் தொழிற்பெயர்ப் பொருள் 'விருப்பு.' 'நசைஇ' என்று அளபெடுக்கும் போது 'விரும்பி' என்ற எச்சப் பொருளாக மாறுகிறது.

நீர் நசைஇ வந்தான் - தண்ணீரை விரும்பி வந்தான்

## 4. குற்றியலுகரம் (½)

குறுமை + இயல் + உகரம் - குற்றியலுகரம்

உகரம் - உ + கரம்; கரம் - எழுத்துச்சாரியை, பொருளற்றது.

'உ' என்ற எழுத்தை எளிமையாக உச்சரிக்க 'கரம்' என்ற சாரியை சேர்த்து 'உகரம்' என்று ஒலிக்கின்றோம்.

"உகரத்தின் மாத்திரை அளவு ஒன்று.

அந்த உகரம் வல்லின மெய் ஆறின் மேல் ஏறி மொழியின் இறுதியில் வரும் போது அரை மாத்திரை அளவாகக் குறைந்து ஒலிக்கும். அதுவே குற்றியலுகரம்.

எ.கா: க் + உ = கு ; ச் + உ = சு ; ட் + உ = டு ; த் + உ = து
ப் + உ = பு ; ற் + உ = று

எ.கா: கொக்கு, பஞ்சு, பாசக்கூடு, அஃது, மார்பு, வயிறு

உகரம் தனிக் குறிலோடு சேர்ந்து வரும் போது குறையாது. ஒரு மாத்திரை அளவாகவே ஒலிக்கும்.

எ.கா: நகு, பசு, விடு, அது - முற்றியலுகரம்.

குற்றியலுகரம் சொல்லின் இறுதியில் உள்ள எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டு ஆறு வகையாக அமையும். அவை,

1. நெடில்தொடர் – ஆடு, காசு, சோறு
2. ஆய்தத்தொடர் – அஃது, கஃசு, எஃகு
3. உயிர்த்தொடர் – வரகு, பலாசு, வரலாறு
4. வன்தொடர் – கொக்கு, கச்சு, பத்து
5. மென்தொடர் – சங்கு, கொஞ்சு, பந்து
6. இடைத்தொடர் – மார்பு, கொய்து, செய்து

## 5. ஐகாரக் குறுக்கம்:

**குறுக்கம்:** ஓர் எழுத்து தன் மாத்திரை அளவில் இருந்து குறைந்து ஒலிப்பதைக் குறுக்கம் என்கிறோம்.

'ஐ' என்னும் நெட்டெழுத்து தனித்து ஒலிக்கும் போது இரண்டு மாத்திரை அளவுடையது. அது சொற்களில் சேர்ந்து ஒலிக்கும் போது இரண்டு மாத்திரையின் குறைந்து ஒலிப்பதால் அதனை ஐகாரக் குறுக்கம் என்கிறோம். ஐகாரம் ஒரு சொல்லின் முதல், இடை, இறுதி ஆகிய மூவிடங்களிலும் குறைந்து ஒலிக்கும்.

எ.கா: ஐவர் – வலைஞர் – பறவை

'ஐ' மொழிக்கு முதலில் 1 ½ மாத்திரை அளவாகவும் மொழிக்கு இடையிலும் இறுதியிலும் 1 மாத்திரை அளவாகவும் ஒலிக்கும்.

## 6. ஔகாரக் குறுக்கம்

"ஔ" என்னும் நெட்டெழுத்து தனித்து ஒலிக்கும் போது இரண்டு மாத்திரை அளவுடையது. அது சொற்களில் சேர்ந்து ஒலிக்கும் போது இரண்டு மாத்திரையின்று குறைந்து ஒலிப்பதால் அதனை ஔகாரக் குறுக்கம் என்கிறோம். ஔகாரக் குறுக்கம் சொற்களுக்கு முதலில் மட்டுமே வரும். சொற்களுக்கு இடையிலும், இறுதியிலும் வராது.

எ.கா: ஔவையார். 1½ + 1 + 2 + ½

## 7. மகரக்குறுக்கம் (1/4)

மருளும், போலும் போன்ற சொற்களிலுள்ள மகரம் தனக்குரிய அரை மாத்திரை அளவே ஒலிக்கும். இவை, செய்யுளில் மருண்ம், போன்ம் என திரிந்து வரும் போது தனக்குரிய அரை மாத்திரை அளவில் குறைந்து ஒலிக்கும். இதற்கு மகரக்குறுக்கம் என்று பெயர்.

ஒரு தொடரில் நிலைமொழி ஈற்று எழுத்து மகர ஒற்றாக இருந்து வருமொழி முதலில் 'வகரம்' வந்தால், நிலைமொழி ஈற்று மகரம் தன் மாத்திரை அளவில் குறைந்து ஒலிக்கும். அவ்வாறு குறைந்து ஒலிப்பதையும் மகரக் குறுக்கம் என்கிறோம்.

மகரக் குறுக்கம் இவ்விரண்டு வகையாகவும் வரும்.

எ.கா: தரும் வளவன் ; வரும் வண்டி

## 8. ஆய்தக் குறுக்கம் (1/4)

~~சொற்களிலுள்ள ஆய்த~~

அஃது, எஃது என்ற சொற்களிலுள்ள ஆய்த எழுத்து அரை மாத்திரை அளவே ஒலிக்கின்றது. எனவே, 'ஆய்தம்' எனப்படும். எ.கா:

அல் + திணை = அஃறிணை, கல் + தீது = கஃறீது ; முள் + தீது = முஃடீது

என்று சொற்புணர்ச்சியில் வரும் ஆய்த எழுத்து தனக்குரிய மாத்திரை அளவில் குறைந்து ஒலிக்கிறது. இதனை ஆய்தக் குறுக்கம் என்கிறோம்.

இவ்வாறு நிலைமொழியின் ஈற்றெழுத்தைச் சார்ந்து வரும் லகர, ளகர மெய்களின் முன்னே வரும் 'தகரம்' முறையே 'றகரமாகவும்', 'டகரமாகவும்' திரியும்.

'லகர', 'ளகர' மெய்கள் ஆய்த எழுத்தாகத் திரியும். இவ்வாறு திரிகின்ற ஆய்த எழுத்து தனக்குரிய அரை மாத்திரையிலிருந்து கால் மாத்திரையாகக் குறைந்து ஒலிப்பதை ஆய்தக் குறுக்கம் என்கிறோம்.

1. ஒற்றளபெடை (1)

மெய்யெழுத்துக்களான ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள் ஆகிய பத்தும் ஆய்தஎழுத்தும் அளபெடுக்கும். ஒற்றளபெடை சொல்லின் இடையிலும் இறுதியிலும் மட்டுமே நிகழும்

குற்றெழுத்து, குறில்இணைக் கீழும் உள்ள மெய்யெழுத்துக்கள் மொழியின் இடையிலும் இறுதியிலும் அளபெடுக்கும்.

செய்யுளில் ஓசை குறையும் பொழுது அதனை நிறைவு செய்வதற்காக சொல்லில் உள்ள மெய்யெழுத்து அளபெடுத்தலை ஒற்றளபெடை என்பர்.

எ.கா. கலங்கு - கலங்ங்கு
வடங்ங் கண்ணானை
இலங்ங்கு வெண்பிறை
எஃஃகி லங்கிய கையர்
இலஃஃகு முத்தின்

குற்றியலிகரம் (1/2 மாத்திரை)

குற்றியலிகரம் = குறுமை + இயல் + இகரம்
குறுகிய + ஓசை . 1 மாத்திரை

* குறுகிய ஓசையுடைய இகரம், இகரம் தன் 1 மாத்திரையில் இருந்து 1/2 மாத்திரையாக குறைந்து ஒலிப்பின் அது குற்றியலிகரம் எனப்படும்.

நிலைமொழி ஈற்றில் உகரம் ஏறிய வல்லினமாக இருந்து (கு, சு, டு, து, பு, று) வருமொழி முதலில் யகரமாக இருப்பின் இரண்டும் புணரும் போது நிலைமொழி ஈற்றில் உள்ள உகரம் இகரமாகத் திரியும். அப்போது இ.கரம் தோன்றும் எ.கா: நாடு + யாது = நாடியாது
பார்த்து + யாகம் = பார்த்தியாகம்

மியா என்ற அசைச் சொல் வரும் போது மி என்ற சொல்லுக்கு 1/2 மாத்திரை. அசைச்சொல் - பொருள் தராத சொல்
ஒரு சொல்லின் இடையிலோ ஈற்றிலோ [illegible]
அது 1/2 மாத்திரையாக அளவாக ஒலிக்கும். அது, இ.கரம் [illegible]

# இலக்கணம்

எழுத்துப் பிழைகள் வாராமல் இருப்பதற்குப் பிழையற்ற நூல்களைப் படிக்க வேண்டும். பாடங்களை நினைவோடு எழுதிப் பார்க்க வேண்டும். ஐயமிருந்தால் பகுதி பார்த்து எழுதுதல் வேண்டும். பாடங்களைப் பார்த்து எழுதினால் எழுத்துப் பிழைகள் ஏற்படாது.

(i) ண, ழ, ள, ற, ன என்னும் வரிசையில் உள்ள எந்த எழுத்தும் சொல்லுக்கு முதலில் வாராமல் எழுதுதல் வேண்டும்.

(ii) யி, யீ, யெ, யே, யை, யொ, யு, யூ, யௌ, யோ, என்னும் எழுத்துக்கள் சொல்லுக்கு முதலில் வருதல் கூடாது.

(iii) 'ங்'. என்னும் மெல்லின மெய் மட்டும் சொல்லுக்கு இறுதியில் நில்லாது என்பதை அறிதல் வேண்டும்.

(iv) தகர வரிசைக்கு முன் 'ந்' வரும் (சிந்து), (மந்தி)
டகர வரிசைக்கு முன் 'ண்' வரும் (வண்டு) திண்டு)
றகர வரிசைக்கு முன் 'ன்' வரும் (என்றார்), கன்று)

(v) ற், ட் என்னும் வல்லின மெய்களுக்குப் பின் எந்த மெய்யெழுத்தும் வராது. (மாற்றம்), (பட்டம்)

(vi) இடையினமாகிய 'ர்' என்னும் மெய்யெழுத்துக்குப் பின் வேறு மெய்யெழுத்தும் வரும் (பார்ப்பதற்கு)

(vii) ஓர், ஒரு என்ற சொற்கள் பயன்படுத்தப்படும் நிலையில் வருமொழி உயிரெழுத்தில் தொடங்கினால் '<u>ஓர்</u>' வர வேண்டும். <u>எ.கா</u>: ஓர் அறை, ஓர் இடம்

(viii) வருமொழி உயிர்மெய் எழுத்தில் தொடங்கினால் '<u>ஒரு</u>' வர வேண்டும். <u>எ.கா</u>: ஒரு மரம்.

(ix) 'அல்லது' என்ற சொல்லை ஐயத்தைக் காட்டும் நிலையில் பயன்படுத்துதல் கூடாது. அங்கே வருவது ராமனோ அல்லது கண்ணனோ என்று எழுதாமல் அங்கே வருவது ராமனோ கண்ணனோ என எழுதுதல் வேண்டும்.

# பிழையான சொற்களும் திருத்தங்களும்

| பிழை | | திருத்தம் |
|---|---|---|
| அமக்களம் | – | அமர்க்களம் |
| அருகாமை | – | அருகில் |
| அருணாக் கொடி | – | அரைநாண்கொடி |
| இன்னாளில் | – | இந்நாளில் |
| ஈ.ர்க்குளி | – | ஈ.ர்க் கொள்ளி |
| உத்திரவு | – | உத்தரவு |
| எண்ணை | – | எண்ணெய் |
| எலை | – | இலை |
| ஏக்கிறாய் | – | ஏய்க்கிறாய் |
| ஐநூறு | – | ஐந்நூறு |
| ஒருவல் | – | ஒருத்தி |
| கடேசி | – | கடைசி |
| கிடாம் | – | கடா |
| காத்தாடி | – | காற்றாடி |
| காச்சல் | – | காய்ச்சல் |
| கைமாத்து | – | கைமாற்று |
| சமயல் | – | சமையல் |
| சிலவு | – | செலவு |
| சீயக்காய் | – | சிகைக்காய் |
| சூட்சி | – | சூழ்ச்சி |
| சோம்பேரி | – | சோம்பேறி |
| நஞ்சை | – | நன்செய் |
| நோம்பு | – | நோன்பு |
| பத்து வரவு | – | பற்று வரவு |
| பழய | – | பழைய |
| பயிறு | – | பயறு |
| பாவக்காய் | – | பாகற்காய் |
| பன்ரெண்டு | – | பன்னிரண்டு |
| மடப்பள்ளி | – | மடைப்பள்ளி |
| முன்னூறு | – | முந்நூறு |
| முந்தாணி | – | முன்தானை |
| வாத்தியார் | – | உபாத்தியாயர் |
| வாய்ப்பாடு | – | வாய்பாடு |

விரை — விரைக
ஒழுக்கினை — ஒழுங்கினை
வெங்கலம் — வெண்கலம்
கிடசி — குடசி
ரிலையம் — நிலையம்
கருப்பூரம் — கற்பூரம்
வரட்சி — வறட்சி
வெள்ளாமை — வேளாண்மை
வேணும் — வேண்டும்
தவராமல் — தவறாமல்
டேனீர் — தேநீர்

## 'ரகர', 'றகர' வேறுபாடுகள்

| | |
|---|---|
| அரம் — ஒரு கருவி | அறம் — தருமம் |
| அரன் — சிவன் | அறன் — தருமம் |
| அர் — வெட்டு, திருமால் | அறு — தொந்நுகொள் |
| அரை — பாதி, அரைத்தல் | அறை — வீட்டுப்பகுதி, கன்னத்தில் அறைதல் |
| இர — நிறைய | இற — இறு இறைய |
| இரங்கு — கருணைகாட்டு | இறங்கு — கீழே வா |
| இரந்தான் — யாசித்தான் | இறந்தான் — செத்தான் |
| இரை — தின், இரைந்து | இறை — அரசன், வரி, கடவுள், பேச |
| உரை — சொல் | உறை — தலையணை உறை |
| எரி — தீ | எறி — வீசு |
| ஏரி — நீர்நிலை | ஏறி — மேலே போய் |
| ஒரு — ஒன்று | ஒறு — தண் |
| கரி — யானை | கறி — காய்கறி, இறைச்சி |
| கருப்பு — பஞ்சம் | கறுப்பு — கருநிறம் |
| கரை — கடற்கரை | கறை — குற்றம் |
| குரவர் — பெரியோர் | குறவர் — குறிஞ்சி நில மக்கள் |
| குரிய — கூர்மையான | கூறிய — சொன்ன |

| | |
|---|---|
| கரை - மேற்கரை | கறை - புசிக்கின் |
| சிரை - மயிரை நீக்கல் | சிறை - சிறைச்சாலை |
| சீரை - மரபு | துறை - நீர்த்துறை |
| நரை - வெண்மயிர் | நறை - வாசனை |
| நிரை - வரிசை | நிறை - எடை |
| பரவை - கடல் | பறவை - பட்சி |
| புரம் - பட்டணம் | புறம் - பக்கம் |
| போர் - நெற்போர் | பொறி - இயந்திரம் |
| பொருப்பு - மலை | பொறுப்பு - கடமை |
| போர்த்தல் - குஞ்சுபோர்த்தல் | பொறித்தல் - கல்லில் எழுத்து பொறித்தல் |
| மரம் - விருட்சம் | மறம் - வீரம் |
| மாரன் - மன்மதன் | மாறன் - பாண்டியன் |
| மாரி - மழை | மாறி - மாறுதல் |
| விரகு - தந்திரம் | விறகு - அடுப்பு விறகு |
| பின்புரம் - பின்புறம் | |

## லகர, ளகர ழகர வேறுபாடுகள்

| | |
|---|---|
| அளித்தல் - ஈதல் | அழித்தல் - கெடுத்தல் |
| ஆள்வார் - ஆளுவோர் | ஆழ்வார் - திருமாலடியவர் |
| உளவு - வேவு பார்த்தல் | உழவு - பயிர்த்தொழில் |
| ஒலி - சப்தம் | ஒளி - வெளிச்சம், ஒழி - நீக்கு |
| காலை - காலைப்பொழுது | காளை - எருது |
| குலம் - ஜாதி | குளம் - நீர்நிலை |
| கொல் - கொன்றுவிடு | கொள் - பெறு |
| கோல் - கம்பு | கோள் - கோள் சொல்லல் |

தால் - நாக்கு, தாள் - கால், முயற்சி, தாழ் - தாழ்வான

| | |
|---|---|
| நால் - நான்கு | நாள் - தினம் |
| புல் - ஒருவகைச்செடி | புள் - பறவை |

வலி - நோய், வளி - காற்று, வழி - பாதை

வால் - விலங்கின் வால், வாள் - ரம்பம், வாழ் - வாழ்க

விலா - விலா எலும்பு, விளா - விளாமரம், விழா - திருவிழா

| | |
|---|---|
| வெல்லம் - கரும்பு வெல்லம் | வெள்ளம் - நீர்ப்பெருக்கு |

| | |
|---|---|
| வேலை - தொழில் | வேளை - பொழுது |
| வேல் - வேலாயுதம் | வேள் - மன்மதன் |

## 'ன'கர, 'ண'கர, 'ந'கர வேறுபாடுகள்

| | |
|---|---|
| அன்னாள் - அவள் | அந்நாள் - அந்தநாள் |
| அன்னம் - ஒருவகைப்பறவை | அண்ணம் - மேல்வாய்ப்பகுதி |
| ஆண் - ஆடவர் | ஆன் - ஒருவகைப்பசு |
| இன்னார் - இத்தகையவர் | இந்நார் - இந்த நார் |
| ஈந்தாள் - கொடுத்தாள் | ஈன்றாள் - பெற்றாள் |
| உன்னல் - நினைத்தல் | உண்ணல் - புசித்தல் |
| ஊன் - மாமிசம் | ஊண் - உணவு |
| என்பது - என்று சொல்லுதல் | எண்பது - 80 |
| கன்னன் - கர்ணன் | கண்ணன் - கிருஷ்ணன் |
| கன்னி - குமரி | கண்ணி - கண்ணையுடையவள் |
| கான் - காடு | காண் - பார் |
| சுண்ணம் - வாசனைப்பொடி | சுன்னம் - சுழி |
| தன் - தனது | தண் - குளிர்ச்சி |
| பனி - குளிர்ச்சி | பணி - வேலை, பணிந்து நடத்தல் |
| தின் - உண் | திண் - வலிமை |
| மனம் - உள்ளம் | மணம் - வாசனை |
| மன் - அரசன் | மண் - பூமி |
| மான் - விலங்கு | மாண் - சிறப்பு |
| முன்னாள் - முற்காலத்தில் | முந்நாள் - முன்புநாள் |
| வன்மை - வலிமை | வண்மை - வள்ளல் தன்மை |
| தன்மை - இயல்பு | தண்மை - குளிர்ச்சி |

# வல்லினம் மிகும் இடங்கள்

(பிழையற்ற தமிழில் இலக்கண மரபு கெடாமல் எழுதுவதுதான் நல்ல தமிழ் எழுதுவதாகும், பிழையோடு அழகாக எழுதுவது மணமற்ற மலர் போலாகும்)

வலி மிகுதல் என்பது நல்ல தமிழ் எழுத விரும்புவோர் அறிந்து கொள்ள வேண்டியவற்றுள் ஒன்று. வல்லெழுத்து மிகுந்து வருதலையே இலக்கணத்தில் சுருக்கமாக வலிமிகுதல் என்பர். (க, ச, ட, த, ப, ற என்னும் ஆறும் வல்லினம் எனப்படும்) இவை நிலைமொழிகளோடு புணரும்போது இடையில் க், ச், ட், த், ப், ற் என்ற மெய்யெழுத்துக்கள் தோன்றும். இதனையே வலிமிகுதல் என்பர்.

(i). 'அ, இ, உ' என்னும் சுட்டெழுத்துக்களின் பின்னும், 'எ' என்னும் வினா எழுத்தின் பின்னும் வரும் க, ச, த, ப மிகும்.

எ.கா:
அ + கிளை = அக்கிளை
இ + செடி = இச்செடி
உ + பக்கம் = உப்பக்கம்
எ + திண்டு = எத்திண்டு

(ii) 'அந்த, இந்த, எந்த' என்னும் சொற்களின் பின்வரும் வலி மிகும்

எ.கா:
அந்த + செடி = அந்தச்செடி
இந்த + குழந்தை = இந்தக்குழந்தை
எந்த + பாடம் = எந்தப்பாடம்

(iii) 'அங்கு, இங்கு, எங்கு, ஆங்கு, ஈங்கு, யாங்கு' ஆகிய சொற்களின் பின்வரும் வலி மிகும்.

எ.கா:
அங்கு + சென்றோம் = அங்குச்சென்றோம்
இங்கு + போகாதே = இங்குப் போகாதே
எங்கு + போனாய் = எங்குப் போனாய்
ஆங்கு + கண்டேன் = ஆங்குக் கண்டேன்

எங்கு + கொத்தேன் = எங்குக் கொத்தேன்
யாங்கு + சென்றாய் = யாங்குச் சென்றாய்

(iv) 'அப்படி, இப்படி, எப்படி' என்னும் சொற்களின் பின் வரும் வலி மிகும்

எ.கா: அப்படி + பார்த்தான் = அப்படிப் பார்த்தான்
இப்படி + செய்தான் = இப்படிச் செய்தான்
எப்படி + தந்தாய் = எப்படித் தந்தாய்

(v) 'ஆண்டு, ஈண்டு, யாண்டு, அவ்வகை, இவ்வகை, எவ்வகை' என்னும் சொற்களின் பின் வரும் வலி மிகும்.

எ.கா ஆண்டு + போனேன் = ஆண்டுப் போனேன்
ஈண்டு + தந்தேன் = ஈண்டுத் தந்தேன்
யாண்டு + சென்றாய்? = யாண்டுச் சென்றாய்?
அவ்வகை + கொடி = அவ்வகைக் கொடி
எவ்வகை + செடி = எவ்வகைச் செடி
இவ்வகை + பூக்கள் = இவ்வகைப் பூக்கள்.

(vi) 'இனி, தனி, மற்று, மற்றை, மற்ற, என, ஆக' என்னும் இடைச்சொற்களின் பின் வரும் வலி மிகும்

எ.கா: இனி + பேசேன் = இனிப் பேசேன்
தனி + கிடைசை = தனிக் கிடைசை
மற்று + பிற = மற்றுப் பிற
மற்றை + செய்யுள் = மற்றைச் செய்யுள்
மற்ற + பிள்ளைகள் = மற்றப் பிள்ளைகள்
என + கூறு = எனக் கூறு, ஆக + சொன்னான்

(vii) 'நடு, பொது, முழு, புது, திரு, அரை, பாதி, எட்டு, பத்து' ஆகிய இவை நிலைமொழியாக, அஃதாவது முதலில் நிற்கும் சொல்லாக இருந்து க, ச, த, ப என்னும் எழுத்துகளுள் ஏதேனும் வருமொழி முதலாக வந்தாலும் வல்லெழுத்து மிகும்

(நிலைமொழி – முன்னால் நிற்கும்; வருமொழி – பின்னால் நிற்கும்)

எ.கா: நடுக்கடல், பொதுக்கட்டம், முழுப்பக்கம், புதுக்கல்வி, திருக்குறள், அரைப்பக்கம், பாதிக்கிணறு, எட்டுத்தொகை, பத்துச் செடிகள்

(viii) வன்தொடர்க் குற்றியலுகரத்தின் பின் வரும் வல் மிகும்.

எ.கா:

மக்கு + பையன் = மக்குப்பையன்
தச்சு + கூலி = தச்சுக்கூலி
விட்டு + சென்றார் = விட்டுச்சென்றார்
பத்து + பாட்டு = பத்துப்பாட்டு
காப்பு + கட்டு = காப்புக்கட்டு
கற்று + கொடுத்தார் = கற்றுக்கொடுத்தார்

(ix) 'அகர' ஈற்று வினையெச்சத்தின் பின்னும், 'இகர' ஈற்று, ஆய், போய் என்னும் வினையெச்சங்களின் பின்னும் வல்லொற்று மிகும்.

எ.கா:

அகர ஈற்று வினையெச்சம் = தேடச் சொன்னான், நன்றாகப் படிப்பான், வரச்சொன்னார், தேடப்போனார்
இகர ஈற்று = தேடிச்சென்றான், கூடிச்சென்றார், வாடிப்போயிற்று, எதிர்த்துப் பார்த்தான், ஆடிப்போனான்
ஆய், போய் = போய்ச்சொன்னார், சொன்னதாய்ச் சொன்னான்

(x) இரண்டாம் வேற்றுமை விரியின் பின் வரும் வல் மிகும்

எ.கா: வீட்டை + கட்டினேன் = வீட்டைக்கட்டினேன்
என்னை + தொட்டான் = என்னைத்தொட்டான்
வேலை செய்தான் = வேலையைச் செய்தான்

(xi) இரண்டாம் வேற்றுமை உருபும், பயனும் உடன் தொக்க தொகையின் பின் வரும் வல் மிகும்.

எ.கா: சிற்றுண்டி + சாலை = சிற்றுண்டிச்சாலை
தண்ணீர் + தொட்டி = தண்ணீர்த்தொட்டி.

(xii) நான்காம் வேற்றுமை விரியின் பின் வரும் வல் மிகும்.

எ.கா: பாலுக்கு + சர்க்கரை = பாலுக்குச்சர்க்கரை
எனக்கு + கொடுத்தான் = எனக்குக்கொடுத்தான்

(xiii) ஏழாம் வேற்றுமை விரியின் பின்னும், ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க

தொகையான் பின்னும் வலி மிகும்.

எ.கா: மனை + பாம்பு = மனைப்பாம்பு
செவ்வாடை + சென்றாள் = செவ்வாடைச் சென்றாள்

(xiv) டு, று இரட்டித்து வரும் நெடில் தொடர் உயிர்த் தொடர்க் குற்றியலுகர சொற்களின் பின்னும் வலி மிகும்.

எ.கா: மாடு + சாணம் = மாட்டுச்சாணம்
ஆறு + பாசனம் = ஆற்றுப்பாசனம்
முரடு + காளை = முரட்டுக்காளை
கிணறு + தவளை = கிணற்றுத்தவளை

(xv) ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வலி மிகும்.

எ.கா: அறியா + பிள்ளை = அறியாப்பிள்ளை

(xvi) ஓர் எழுத்து ஒரு மொழிக்குப் பின் வரும் வலி மிகும்

எ.கா: பூ + பறித்தாள் = பூப்பறித்தாள்
தீ + பிடித்தது = தீப்பிடித்தது
தை + பொங்கல் = தைப் பொங்கல்

(xvii) இரு பெயரொட்டுப் பண்புத் தொகை, உவமைத் தொகை, உருபும் பயனும் உடன் தொக்க தொகை இவற்றின் பின் வரும் வலி மிகும்

எ.கா: மார்கழி + திங்கள் = மார்கழித்திங்கள்
மலர் + கை = மலர்க்கை
நீர் + குடம் = நீர்க்குடம்.

# வல்லினம் மிகா இடங்கள்

(வல்லின எழுத்துக்கள் நிலைமொழியோடு புணரும் போது க், ச், ட், த், ப், ற், என்ற மெய்யெழுத்து-கள் இடையில் தோன்றக் கூடாத இடங்கள் வல்லினம் மிகா இடங்கள் ஆகும்.)

1. ('அது, இது, எது' என்னும் சொற்களின் பின் வரும் வலி மிகாது.

எ.கா:

அது + பெரிது = அது பெரிது
இது + சரி = இதுசரி
எது + கொடியது = எது கொடியது

2. (இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வலி மிகாது.

எ.கா:

பறவை + பாடித்தான் = பறவைபாடித்தான்
கதை + சொல் = கதைசொல்

3. (நான்காம் வேற்றுமைத் தொகையில் உயர் திணைப் பெயர்களின் வலி மிகாது.

எ.கா: பொன்னி + கணவன் = பொன்னிகணவன்
(பொன்னிக்குக் கணவன் என்பது பொருள்)

4. (வினைத் தொகையில் வலி மிகாது.

எ.கா: பாய் + புலி = பாய்புலி
கரு + சோறு = கருசோறு

5. (உம்மைத் தொகையில் வலி மிகாது.

எ.கா: கல்வி + கேள்வி = கல்விகேள்வி
நன்மை + தீமை = நன்மைதீமை

6. இரண்டு, மூன்று, ஆறு, ஒன்பது என்னும் எண்ணுப் பெயர்களின் பின் வரும் வலி மிகாது.

எ.கா: இரண்டு கிண்ணங்கள், மூன்று குழந்தைகள் ஆறு கடைகள், ஒன்பது பூட்டுகள்

7. சில, பல ஆகிய இச்சொற்களுக்குப் பின் வரும் வலி மிகாது.

எ.கா: சில + புலவர்கள் = சில புலவர்கள்
பல + துணி = பல துணி

8. அன்று, இன்று, என்று என்னும் காலப் பெயர்களின் பின் வரும் வலி மிகாது.

எ.கா:

அன்று + போனார் = அன்று போனார்
இன்று + கேட்டார் = இன்று கேட்டார்
என்று + சொல்வார் = என்று சொல்வார்

9. ஆ, ஓ என்னும் வினாக்களுக்குப் பின் வலி மிகாது.

எ.கா: அவனா + பேசினான் = அவனா பேசினான்?
தம்பியா + கேட்கிறான் = தம்பியா கேட்கிறான்?

10. நெடில் தொடர், ஆய்தத் தொடர், உயிர்த்தொடர், இடைத்தொடர், குற்றியலுகரங்களின் பின் வரும் வலி மிகாது.

எ.கா: ஆடு + தின்றது = ஆடு தின்றது
எஃகு + தீது = எஃகு தீது
மார்பு + பெரியது = மார்பு பெரியது.

11. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் தவிரப் பிற பெயரெச்சங்களின் பின் வல்லெழுத்து மிகாது. ஓடிய குதிரை என்னும் தொடரில் ஓடிய என்பது பெயரெச்சம், ஓடாத குதிரை என்னும்

தொடர்நிலைக்கும் ஆகாத என்பது ஈறு கெட்ட எதிர்மறை பெயரெச்சம் ஆகாக் குதிரை என்பதும் தொடர் உள்ள ஆகா என்பது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

எ.கா:

பெரிய + பெட்டி = பெரியபெட்டி
சிறிய + குதிரை = சிறியகுதிரை
நல்ல + பாம்பு = நல்லபாம்பு
நல்ல + குழந்தை = நல்லகுழந்தை
படித்த + பையன் = படித்தபையன்
படியாத + பெண் = படியாதபெண்

12. எழுவாய்த் தொடரில் வலி மிகாது

எ.கா: கோழி + பெரியது = கோழிபெரியது
நாய் + தின்றது = நாய்தின்றது

13. விளித் தொடரில் வலி மிகாது

எ.கா: தம்பி + கேள் = தம்பி கேள்

14. இரு வடமொழிச் சொற்கள் சேர்ந்து வரும் தொடர்களில் வலி மிகாது.

எ.கா: ஆதி + பகவன் = ஆதி பகவன்

15. முன்னிலை வினைமுற்று, ஏவல் வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று இவற்றுக்குப் பின் வரும் வலி மிகாது.

எ.கா: வந்தாய் குமரா, போதும்பா, வாரா குதிரைகள்

# சொல் பிழை நீக்கம்

| பிழை | திருத்தம் |
|---|---|
| எந்தன் | என்றன் |
| உந்தன் | உன்றன் |
| சாமிநாதன் | சாமிநாதன் |
| பன்னிரெண்டு | பன்னிரண்டு |
| கின்னம் | கிண்ணம் |
| ஆன் | ஆண் |
| பென் | பெண் |
| கன்னன் | கண்ணன் |
| முன்னூறு | முந்நூறு |
| தேனீர் | தேநீர் |
| வல்லுனர் | வல்லுநர் |
| நம்னாடு | நம்நாடு |
| பின்புரம் | பின்புறம் |
| நாட்டுப்புரம் | நாட்டுப்புறம் |
| சுருசுருப்பு | சுறுசுறுப்பு |
| திருநீரு | திருநீறு |
| சில்லரை | சில்லறை |
| பொய்ப்பல் | பொய்ப்பழி |
| சூரியவொலி | சூரியவொளி |
| மணியொளி | மணியொலி |
| உயிர்க்கொளை | உயிர்க்கொலை |
| புல் பறந்தது | புள் பறந்தது |
| மாழை வாங்கு | மாலை வாங்கு |
| காழ்வேள் | காமவேள் |
| பாழை நிலம் | பாலை நிலம் |

# மரபுப் பிழை நீக்கல்

ஆந்தை அலறும்
காகம் கரையும்
குயில் கூவும்
கோட்டான் குழறும்
வாத்து கத்தும்
சேவல் கூவும்
மயில் அகவும்
வண்டு முரலும்
கூகை குழறும்
புலி உறுமும்
குதிரை கனைக்கும்
சிங்கம் கர்ஜிக்கும்
கழுதை கத்தும்
யானை பிளிறும்
நரி ஊளையிடும்

அலகு-5 இலக்கிய வரலாறு

# II. இக்கால இலக்கியத் தகவல்கள்

## 1. கவிதை - மரபுக்கவிதை

### பாரதியார்

- இயற்பெயர் சுப்பிரமணியம் - சுப்பையா என அழைக்கப்பட்டார்
- பெற்றோர்: சின்னசாமி ஐயர் - லட்சுமி அம்மாள்
- ஊர் : எட்டயபுரம்
- வாழ்நாள்: 11.12.1882 முதல் 11.9.1921 வரை 39 ஆண்டுகள்
- எட்டயபுர சமஸ்தானப் புலவர்கள் 'பாரதி' என்ற பட்டம் அளித்தனர்
- அறிவில் சிறந்த இல்லறத்தார்க்குக் கொடுக்கப்படும் பட்டம் பாரதி
- ஞானத்தில் உயர்ந்த துறவிகளுக்குக் கொடுக்கப்படும் பட்டம் சரஸ்வதி
- பாரதி, சரஸ்வதி இரண்டுமே கலைமகளின் வேறு பெயர்கள்
- தன்னை 'ஷெல்லிதாசன்' என்று அழைத்துக்கொண்டார்
- புனைபெயர்கள்: காளிதாசன், சக்திதாசன், சாவித்திரி, ஓர் உத்தம தேசாபிமானி, நித்திய தீரர், ஷெல்லிதாசன்
- தம் பூணூலை கனகலிங்கம் என்ற ஆதி திராவிடர்க்கு அளித்தவர்
- புதுக்கவிதைக்கு முன்னோடி
- பாரதியின் புதுக்கவிதை முன்னோடி வால்ட் விட்மன்
- தம் பாடல்களுக்குத் தாமே மெட்டு அமைத்த கவிஞர்
- கவிதையில் சுயசரிதம் எழுதிய முதல் கவிஞர்
- 1905இல் சக்கரவர்த்தினி என்ற இதழ் தொடங்கினார்
- கர்மயோகி, பாலபாரத், (ஆங்கில இதழ்) ஆகியவற்றை நடத்தினார்
- சுதேசி மித்திரன் என்ற இதழின் துணையாசிரியர்
- 'இந்தியா' என்ற இதழின் ஆசிரியராகப் பணியாற்றினார்

மகாகவி, தேசியகவி, ராஷ்டிரகவி.

- சென்னை ஜனசங்கம் என்ற அமைப்பைத் தோற்றுவித்தவர் பாரதி
- நிவேதா தேவியைச் சந்தித்தபின் பாரதி தீவிரவாதியானார்
- பல மொழிகளில் நல்ல புலமை பெற்றவர்
- பாரதியின் முக்கிய நண்பர்கள்; பரலி நெல்லையப்பர் (தம்பி என்று பாரதியால் அழைக்கப்பட்டவர்) வ.ரா.,பாரதிதாசன்.

பாடியவை

சுதந்திரப் பாடல்கள், தேசியப் பாடல்கள், தலைவர் வாழ்த்துக்கள், பக்திப் பாடல்கள், சமூகப் பாடல்கள், பாப்பாப் பாட்டு, புதிய ஆத்திசூடி, முப்பெரும் பாடல்கள், வசன கவிதை

முப்பெரும் பாடல்கள் என்பன:

1. கண்ணன் பாட்டு 2. குயில் பாட்டு 3. பாஞ்சாலி சபதம்

புதுவையில் இருக்கும்போது எழுதியது குயில் பாட்டு

பாஞ்சலி சபதம் ஒரு கண்ட காவியம்

ஒரு பெருங்காவியத்தில் வரும் ஒரு கிளைக் கதையைத் தனிக் காவியமாகப் பாடுவது கண்டகாவியம் எனப்படும்.

கண்டம் – துண்டு

வசன கவிதை 'காட்சி' என்ற தலைப்புடையது

பாரதியார் பாடல்களை முதன் முதலில் மக்களுக்கு அறிமுகம் செய்தவர் பரலி சு. நெல்லையப்பர்

பாரதியார் பாடல்களை முதன் முதலில் வெளியிட்டவர் கிருஷ்ணசாமி ஐயர்

பாரதி பாடல்களை ஏ.வி.மெய்யப்பச் செட்டியாரிடமிருந்து வாங்கி நாட்டுடைமையாக்கியவர் ஓமந்தூர் பி. ராமசாமி ரெட்டியார்

தற்போது புகழ்பெற்று விளங்கும் பாரதியின் படத்தை வரைந்தவர் ஆர்ய என்ற பாஷ்யம்

பாரதிக்கு 'மகாகவி' என்ற பட்டம் கொடுத்தவர் வ.ரா. (ராமசாமி ஐயங்கார்)

பாரதி சங்கத்தைத் தோற்றுவித்தவர் கல்கி.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்"
"மேதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்"
"சொல்லில் உயர்வு தமிழச் சொல்லே – அதைத்
தொழுது படித்திடடி பாப்பா"
"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புது நூல்கள் இயற்றல் வேண்டும்"
"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச் செல்வங்கள்
யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்"
"மாதர்தம்மை இழிவு செய்யும் மடமையைக்
கொளுத்துவோம்"
"ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக
வாழ்வம் இந்த நாட்டிலே"
"ஏழை என்றும் அடிமை என்றும் எவனும் இல்லை
சாதியில்"
"வாழிய பாரத மணித்திருநாடு"
"நமக்குத் தொழில் கவிதை நாட்டிற்கு உழைத்தல்"
"எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்"
"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு- நம்மில்
ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வு"
"பள்ளித்தலம் அனைத்தும் கோயில் செய்குவோம்"
"புண்ணியங்கோடி ஆங்கோர்
ஏழைக்கு எழுத்தறிவித்தல்"
"உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்
வாக்கினிலே ஒளி உண்டாம்"
"மனதில் உறுதிவேண்டும்
வாக்கினில் இனிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்"

"காதல் காதல் காதல்
காதல் போயின் காதல் போயின்
சாதல் சாதல் சாதல்"
"பாட்டினில் நெஞ்சைப் பறிகொடுத்த பாவியேன்"
"பாட்டினைப் போல் ஆச்சரியம்
பாரின்மிசை இல்லையடா"
"தனிஒருவனுக்கு உணவுஇல்லை எனில் இச்
சகத்தினை அழித்திடுவோம்"
"காக்கை குருவி எங்கள் சாதி – நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்"
"செப்புமொழி பதினெட்டு உடையாள் – எனில்
சிந்தனை ஒன்றுடையாள்"
"என்று தோன்றியவள் என்று உணர
முடியாதவளாம் எங்கள் தாய்" (பாரதத் தாய்)
"தருமத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும்
தருமம் மறுபடியும் வெல்லும்"
"கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம் மாறும்"
"செந்தமிழ் நாடெனும் போதினிலே..."
"சிந்து நதியின் மிசை..."
"ஊண்மிக விரும்பு" "தையலைப் போற்று"
"சீறுவார் சீறு"

## புகழுரைகள்

- "பாரதியார் ஒரு அவதார புருஷர், இவர் நூலைத் தமிழர் வேதமாகக் கொள்வார்களாக" – பரலி சு. நெல்லையப்பர்
- "பாரதியை நினைத்திட்டாலும் சுதந்திரத்தின் ஆவேசம் சுருக்கென்று ஏறும்; இந்தியன் நான் என்றிடும் நல் இறுமாப்பு உண்டாம்" – நாமக்கல் கவிஞர்

"பைந்தமிழ்த் தேர்ப்பாகன்
செந்தமிழ்த் தேனி
சிந்துக்குத் தந்தை
குவிக்கும் கவிதைக் குயில்

இந்நாட்டினைக் கவிழ்க்கும் பகையைக்
கவிழ்க்கும் கவிமுரசு
நீடு துயில் நீக்கப் பாடிவந்த நிலா
காடு கமழும் கற்பூரச் சொற்கோ
கற்பனை ஊற்றாம் கவிதையின் புதையல்
திறம் பாட வந்த மறவன் புதிய
அறம் பாட வந்த அறிஞன்
என்னென்று சொல்வேன் என்னென்று சொல்வேன்
தமிழால் பாரதி தகுதிபெற்றதும்
தமிழ் பாரதியால் தகுதி பெற்றதும்"

– பாரதிதாசன்

## பாரதிதாசன்

- இயற்பெயர் சுப்புரத்தினம்
- பெற்றோர்: கனகசபை – லட்சுமி
- ஊர் புதுச்சேரி
- வாழ்நாள் *29.4.1891* முதல் *21.4.1964* வரை 73 வயது
- *16* வயதில் புதுவை அரசினர் கல்லூரியில் பேராசிரியர் பணியில் சேர்ந்தார்
- *1938* இல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.
- புதுவையில் பாரதியின் கட்டளைக்கிணங்கப் பாடியது "எங்கெங்கு காணினும் சக்தியடா – தம்பி ஏழுகடல் அவள் வண்ணமடா" என்ற பாடல். இதனைப் பாரதி "ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியின் கவிதா மண்டலத்தைச் சேர்ந்த கனக சுப்புரத்தினம் எழுதியது" எனக் குறிப்பிட்டுச் சுதேசமித்திரன் இதழுக்கு அனுப்பினார்.

## நூல்கள்

- பாரதிதாசன் கவிதை தொகுப்பு *1, 2, 3*
  இசைஅமுது தொகுதி *1, 2*
  பாண்டியன் பரிசு, எதிர்பாராத முத்தம், சேரதாண்டவம்,

அழகின் சிரிப்பு, குடும்ப விளக்கு, இருண்ட வீடு, குறிஞ்சித்திட்டு, கண்ணகி, புரட்சிக் காப்பியம், மணிமேகலை வெண்பா, காதல் நினைவுகள், கழைக்கூத்தியின் காதல், தமிழச்சியின் கத்தி, அமைதி, இளைஞர் இலக்கியம், சௌமியன், நல்ல தீர்ப்பு, தமிழ் இயக்கம், இரணியன் அல்லது இணையற்ற வீரன், காதலா கடமையா?, சஞ்சீவி பர்வதத்தின் சாரல்

- பொதுவுடைமையை வலியுறுத்துவது சஞ்சீவி பர்வதத்தின் சாரல்
- இயற்கையை வருணிப்பது அழகின் சிரிப்பு
- கற்ற பெண்களின் சிறப்பைக் கூறுவது குடும்ப விளக்கு
- கல்லாத பெண்களின் இழிவைக் கூறுவது இருண்ட வீடு
- பில்கணியத்தின் தழுவல் புரட்சிக் காப்பியம்
- இவர் உரை எழுதிய நூல் திருக்குறள்
- நடத்திய இதழ் 'குயில்'

### மேற்கோள்

"நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து
நிலாவென்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தை
கோலம் முழுவதும் காட்டிவிட்டால் காதற்
கொள்ளையிலே இவ்உலகம் சாமோ?"

"எல்லார்க்கும் எல்லாம் என்று இருப்பதான
இடம்நோக்கி நகர்கிறது இந்தவையம்
கல்லாரைக் காணுங்கால் கல்விநல்காக்
கசடர்க்குத் தூக்குமரம் அங்கே உண்டாம்"

"பொருளாளி திருடர்களை விளைவிக்கின்றான்
பொதுவுடையோன் திருட்டைக் களைவிக்கின்றான்"

"கல்வி இல்லாத பெண்கள் களர்நிலம், அந்நிலத்தில்
புல்விளைந் திடலாம், நல்ல புதல்வர்கள் விளைவதில்லை
கல்வியை உடைய பெண்கள் திருந்திய கழனி, அங்கே
நல்லறிவுடைய மக்கள் விளைவது நவிலவோ நான்"

"அமைவிலாக் குடும்பத் துள்ளும்
அகத்தினில் மகிழ்ச்சி வேண்டின்
சமையலில் திறமை வேண்டும்
சாக்காடும் தலைகாட்டாதே"

"மண்ணாய்ப் போக மண்ணாய்ப் போக
மனம்பொருந்தா மணம் மண்ணாய்ப் போகவே"
"காதல் இருவர்தம் கருத்தொருமித்தபின்
வாதுகள் வம்புகள் ஏன்? இதில் மற்றவர்க்கு என்ன
உண்டு"
"தமிழுக்கும் அமுதென்று பேர்- இன்பத்
தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"
"தமிழைப் பழித்தவனைத் தாய் தடுத்தாலும் விடாதே"
"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு"
"உணர்ந்திடுக
தமிழ்த் தாய்க்கு வரும் தீமை உனக்கு வரும் தீமையன்றோ
ஒண்தமிழ்த்தாய் சிலம்படியின் முன்னேற்றம்
ஒவ்வொன்றும் உன் முன்னேற்றம்"
"ஓடப்பராய் இருக்கும் ஏழையப்பர்
உதையப்ப ராகிவிட்டால், ஓர் நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆகிவிடுவார் உணரப்பா நீ"
"நல்ல குடும்பம் பல்கலைக் கழகம்"
"தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை"
"கொலை வாளினை எடடா - மிகு
கொடியோர் செயல் அறவே"
"பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே"
"முத்தமிழ் நாட்டு மானம் பெரிதன்றி
மூச்சுப் பெரிதில்லை காண்"
"மங்கை ஒருத்தி தரும் சுகம் - எங்கள்
மாத்தமிழுக்கு ஈடில்லை"
"மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை - எமை
மாட்ட நினைக்கும் சிறைச்சாலை"
"கோரிக்கையற்றுக் கிடக்குதண்ணே - இங்கு
வேரில் பழுத்த பலா"

"தலைவாரி பூச்சூடி உன்னைப் பாடச்
சாலைக்குப் போவென்று சொன்னாள் உன் அன்னை"

"துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ
இன்பம் சேர்க்க மாட்டாயா?"

"தமிழ் ஆய்ந்த தமிழன்தான் தமிழ்நாட்டின்
முதலமைச்சாய் வருதல் வேண்டும்"

## புகழுரைகள்

- "அறிவுக் கோயிலைக் கட்டி அதில் நம்மைக் குடியேற்ற விரும்புகின்ற பேரறிஞன்"– புதுமைப்பித்தன்
- "பாரதிக்குப் பிறகு தமிழ்நாட்டில் ஓர் உண்மையான கவி" – கு.ப. ரா.
- "அவர்தம் பாடல்களைப் படிக்கின்ற அன்னியனும் தமிழனாகி விடுவான்" – அ. சிதம்பரநாத செட்டியார்

## முடியரசன்

- வாழ்நாள் : 1920 – 1998
- இயற்பெயர் துரைராஜ்
- திராவிட இயக்கக் கவிஞர்

## நூல்கள்

- முடியரசன் கவிதைகள், காப்பியப் பாவை, பூங்கொடி (தமிழ் இயக்கப் போராட்ட வரலாறு)
- நாடகம்: ஊன்றுகோல் (பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார் பற்றியது)

## மேற்கோள்

**"வயலுக்கு வரப்பொன்றும் வேண்டாம் என்றால்
வளக்கரைகள் ஆற்றுக்கு வேண்டாம்என்றால்
இயல்மொழிக்கு இலக்கணம் வேண்டாம் பெண்ணே"
"மொழி காக்கும் வரம்பில்லையேல்
எம்மொழியும் அழிந்து போகும்"
"மணவினையில் தமிழுண்டா, பயின்றவர் தம்முள்
வாய்ப்பேச்சில் தமிழுண்டா, மாண்டபின்னர்
பிணவினையில் தமிழுண்டா"**

## பட்டுக்கோட்டைக் கலியாண சுந்தரம்

- பொதுவுடைமைக் கருத்துகளைத் திரைப்படப் பாடலில் புகுத்தியவர்
- 'எனது வலதுகை' என்று பாரதிதாசனால் புகழப்பட்டவர்
- 'அவர் கோட்டை நான் பேட்டை' என வேடிக்கையாகச் சொன்னவர் உடுமலை நாராயணகவி

- நாட்டுப்புறப் பாடல் மெட்டில் நாட்டம் கொண்டவர்
- முதல் பாடல் "நல்லதைச் சொன்னா நாத்திகனா" என்பது
- சினிமாவில் இருந்தது ஒன்பது ஆண்டுகள் (1951 - 1959)
- மொத்த திரைப்படப் பாடல்கள் 56

பாடல்கள்

"தூங்காதே தம்பி தூங்காதே
உயர்பள்ளியில் தூங்கியவன் கல்வி இழந்தான்
கொண்ட கொள்கையில் தூங்கியவன் புகழ் இழந்தான்
"திருடாதே பாப்பா திருடாதே"
"மானைத் தேடி மச்சான் வரப் போறான்"
"ஆரம்பமாவது பெண்ணுக்குள்ளே - மனிதன்
ஆடி அடங்குவது மண்ணுக்குள்ளே"
"இந்த திண்ணைப் பேச்சு வீரரிடம் - ஒரு
கண்ணா இருக்கணும் அண்ணாச்சி"
"காதலிலே தோல்வியுற்றாள் கன்னி ஒருத்தி
கலங்குகிறாள் அவனை நெஞ்சில் நிறுத்தி"
"ஆடைக்கட்டி வந்த நிலவோ"
"சின்னப் பயலே சின்னப் பயலே சேதி கேளடா"
"வேப்பமர உச்சியில் நின்று"
"காடு வெளஞ்சென்ன மச்சான் - நமக்குக்
கையுங் காலுந்தானே மிச்சம்"
"வசதி இருக்கிறவன் தரமாட்டான் - அவனை
வயிறு பசிக்கிறவன் விடமாட்டான்"
"கொடுத்தவனே எடுத்துக் கொண்டாண்டி"
"முகத்தில் முகம் பார்க்கலாம்"

**கண்ணதாசன்**

- பெற்றோர் சாத்தப்பன், விசாலாட்சி
- இயற்பெயர் முத்தையா
- ஊர் சிறுகூடற்பட்டி – சிவகங்கை மாவட்டம்
- வாழ்நாள் 24.6.1927 முதல் 17.10.1981 வரை. 54 வயது.
- சேலம் மாவட்டம் சலகண்டபுரம் (சலங்கை) பா. கண்ணன் என்ற நாடக ஆசிரியரின் தாசன்.
- புனைபெயர்கள்: காரைமுத்துப் புலவர், வணங்காமுடி, கமகப்பிரியா, துப்பாக்கி, பார்வதிநாதன், ஆரோக்கியசாமி

நூல்கள்

- கவிதைகள் - ஏழு தொகுதிகள்

திரையிசைப் பாடல்கள் - ஐந்து தொகுதிகள்

மாங்கனி - திருச்சி சிறையிலிருந்தபோது எழுதிய முதற் காவியம்

ஆட்டனத்தி ஆதிமந்தி - காதல் காப்பியம்

இயேசு காவியம் - இறுதியாக எழுதிய நூல். இது ஒரு காப்பிய நூல்.

ஸ்ரீ கிருஷ்ணகவசம் - பக்திப்பாடல்

நாவல்கள்

- குமரிக் காண்டம் - லெமுரியாக் கண்டத்தைக் காட்டுவது

சேரமான் காதலி - சாகித்திய அகாடமி பரிசு பெற்றது

வேளங்குடித் திருவிழா, ஊமையன் கோட்டை, விளக்கு மட்டுமா சிவப்பு, ஆயிரங்கால் மண்டபம், சிங்காரி பார்த்த சென்னை, சிவகங்கைச் சீமை, ராஜ தண்டனை

உரை நடை நூல்

- அர்த்தமுள்ள இந்து மதம் - தத்துவ விளக்க நூல்

ஞானமாலிகா, புஷ்பமாலிகா, ராகமாலிகா - தத்துவ விசாரணை

வனவாசம், மனவாசம் - தன் வரலாற்று நூல்கள்

- திரையிசைப் பாடல் மூலம் புகழ் பெற்றவர்
- முதல் திரையிசைப் பாடல் 'கலங்காதிரு மனமே'

படம்: கன்னியின் காதல் இறுதிப்பாடல் 'கண்ணே கலைமானே' படம் மூன்றாம் பிறை

இதழ்கள்: திருமகள், திரைஒளி, மேதாவி, தென்றல், திரை, முல்லை, கடிதம், கண்ணதாசன் சண்ட மாருதம்

மேற்கோள்

"போற்றுவார் போற்றட்டும் புழுதிவாரித்
தூற்றுவார் தூற்றட்டும் தொடர்ந்து செல்வேன்"

"ஆடையின்றிப் பிறந்தோம் ஆசையின்றிப் பிறந்தோமா"

"சாவே உனக்கொரு நாள் சாவு வந்து சேராதோ....

தெய்வமே உம்மையாம் தேம்பி அழவையாமோ”

– நேரு இறந்தபோது பாடியது

“வீடுவரை உறவு வீதிவரை மனைவி
காடுவரை பிள்ளை கடைசிவரை யாரோ”

## புகழுரைகள்

– தமிழக அரசின் ஆஸ்தானக் கவிஞராக இருந்தவர்
– பழந்தமிழ்ப் பாடல்களை எளிமையாக்கியவர்
– காதல், தத்துவம் பாடுவதில் வல்லவர்

# 2. புதுக் கவிதை

"விருந்தே தானும்
புதுவது கிளந்த யாப்பின் மேற்றே"

என்று தொல்காப்பியர் கூறும் வனப்பு எட்டில் ஒன்றான விருந்தின் நூற்பாவைக் காட்டி விருந்தில் அடக்கலாம் என்பர்.

முதன் முதலில் புதுக்கவிதை எழுதிய ஆங்கிலேய அமெரிக்காவைச் சேர்ந்த வால்ட் விட்மன்.

வால்ட் விட்மன் எழுதிய புதுக்கவிதை நூலின் பெயர் புல்லின் இதழ்கள் (Leaves of Grass)

- தமிழில் முதன் முதலாகப் புதுக்கவிதை எழுத முயற்சி செய்தவர் பாரதியார்
- பாரதிக்கு வழிகாட்டி வால்ட் விட்மன்
- பாரதி எழுதிய புதுக்கவிதை 'காட்சி' என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ளது
- தமிழ்ப் புதுக்கவிதையின் முன்னோடி நா. பிச்சமூர்த்தி
- முதன் முதலில் புதுக்கவிதை வெளியிட்ட இதழ் மணிக்கொடி
- புதுக்கவிதை இதழ்கள்: மணிக்கொடி, எழுத்து, வானம்பாடி ஞானரதம், இலக்கிய வட்டம், தாமரை, தீபம், வேள்வி, கணையாழி, கசடதபற, கஙய, பூ, ஃ, ஐ
- எழுத்து இதழை 1959இல் தொடங்கியவர் க.நா. சுப்பிரமணியன் வானம்பாடி: 1971இல் பல கவிஞர்கள் கூடிக் கோவையில் தொடங்கினார்கள்
- புதுக்கவிதைக்குத் தொடக்கத்தில் இருந்த வேறு பெயர்கள் உரைப்பா (பெருஞ்சித்திரனார்) உரைவீச்சு (சாலை இளந்திரையன்), சொற்கோலம் (கண்ணதாசன்) குறும்பா, பேச்சு நிலைப்பா, சுதந்திரப்பா, விடுதலைப்பா.
- எழுத்துக் காலக் கவிஞர்கள்: பிச்சமூர்த்தி, தருமு சிவராமு வைதீஸ்வரன், க.நா. சுப்பிரமணியம், பசவய்யா, வேணுகோபாலன், சி.சு. செல்லப்பா, நகுலன்

- வானம்பாடிக் காலக் கவிஞர்கள்: தமிழன்பன், அப்துல் ரகுமான், மேத்தா, சிற்பி, சக்திக்கனல், வைரமுத்து, தேனரசன், புவியரசு, காமராசன், தமிழ்நாடன், கங்கை கொண்டான், இன்குலாப், அக்கினிபுத்திரன்.
- எழுத்துக் காலக் கவிஞர்கள் அகநிலைக் கவிஞர்கள் ஆவர்.
- வானம்பாடிக் காலக் கவிஞர்கள் புறநிலைக் கவிஞர்கள் ஆவர்.
- மன உணர்வுகளை மிகுதியாகப் பாடியவர்கள் எழுத்துக் காலக் கவிஞர்கள்.
- சமுதாய உணர்வுகளை மிகுதியாகப் பாடியவர்கள் வானம்பாடிக் காலக் கவிஞர்கள்
- எழுத்துக் காலக் கவிஞர்கள் பெரும்பாலோர் யாப்பிலக்கணம் அறியாதவர்கள்.
- வானம்பாடிக் காலக் கவிஞர்கள் பெரும்பாலோர் யாப்பிலக்கணம் அறிந்தவர்கள், பேராசிரியர்கள்.
- யாப்பிலக்கணம் கற்று முதலில் மரபுக் கவிதை எழுதிப் பின் புதுக்கவிதை ஏழுத வந்தவர்கள் வானம்பாடிக் காலக் கவிஞர்கள்.
- புதுக்கவிதையில் கட்புலக் காட்சியை (சித்திரக் கவி அமைப்பு) மிகுதியாகப் பயன்படுத்திய கவிஞர் பா. உதயகுமார். (ஓர் அழகின் வெளிச்சம்)
- புதுக்கவிதை இலக்கணம் என்ற நூலை எழுதியவர் இரா. இராசேந்திரன் (தேவிரா).

## அப்துல் ரகுமான்

- வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரிப் பேராசிரியராக விளங்கியவர்.
- மாணவர்களைப் புதுக்கவிதை எழுதத் தூண்டியவர்.
- கவிக்கோ என்ற பட்டம் பெற்றவர்.
- படிமக் கவிஞர்.
- தொன்மம் என்ற இலக்கிய உத்தியை மிகுதியாகப் பயன்படுத்தியவர்.
- "புதுக்கவிதையில் குறியீடு" என்பது முனைவர் பட்ட ஆய்வு.

நூல்கள்

- பால்வீதி, நேயர் விருப்பம், சுட்டுவிரல், ஆலாபனை, சொந்த சிறைகள், பித்தன், முட்டைவாசிகள், அவளுக்கு நிலா என்று பெயர், விதைபோல் விழுந்தவன், முத்தமிழின் முகவரி.
- அறிஞர் அண்ணா பற்றிய கவியரங்கக் கவிதைத் தொகுப்பு விதைபோல் விழுந்தவன்.
- கலைஞர் கருணாநிதியைப் பற்றிய கவியரங்கக் கவிதைத் தொகுப்பு முத்தமிழின் முகவரி.

மேற்கோள்

“புறத்திணைச் சுயம்வர மண்டபத்தில்
போலி நளன்களில் கூட்டம்
கையில் மாலையுடன்
குருட்டுத் தமயந்தி”
“உன் தராசுத் தட்டுகளைக்
கொஞ்சம் கண்திறந்து பார்
அங்கே
புறாவின் மாமிசத்தை
சிபிகள் உண்ண ஆரம்பித்து விட்டார்கள்”

மீரா

- இயற்பெயர் மீ. ராசேந்திரன்
- அன்னம் விடு தூது ஏன்ற இதழின் ஆசிரியர்
- இவரது அன்னம் வெளியீடு புதுக்கவிதைகளை மிகுதியாக வெளியிட்டது.

நூல்கள்

- கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள், மூன்றும் ஆறும், ஊசிகள், பாரதியம்.

மேற்கோள்

“என்வீட்டு முற்றத்தில் பெய்யும் மழை
உன்வீட்டு முற்றத்திலும் பெய்கிறது
என் தோட்டத்தில் பாடும் குயில்

உன் தோட்டத்திலும் பாடுகிறது
என் கண்ணில் படும் நிலா
உன் கண்ணிலும் படுகிறது
என் இதயத்தில் நுழையும் காதல் மட்டும்
உன் இதயத்தில் நுழையவில்லையா?"

நா. காமராசன்

- வானம்பாடிக் காலத்திற்கு முன்பே சமுதாய அக்கறையோடு புதுக்கவிதை புனைந்தவர்.
- உருவகக் கவிஞர்
- கவியரசு என்ற பட்டம் பெற்றவர்.

நூல்கள்

- கருப்பு மலர்கள், கிறுக்கல்கள், நாவல் பழம், மகா காவியம், சுதந்திர தினத்தில் ஒரு கைதியின் டைரி, தாஜ்மகாலும் ரொட்டித் துண்டும், சூரியகாந்தி, சகாராவைத் தாண்டாத ஒட்டகங்கள்.

மேற்கோள்

- "இறந்ததற்குப்
பின்னாலும்
ஏழைகளின் ரொட்டியாய்
எவன் பிறவி எடுப்பானோ
இப்புவியில்
நாள்தோறும்
எவன் பிறவி எடுப்பானோ
அன்னவனின்
கைத்தலத்தில்
ஆவியெல்லாம் பாட்டாக்கி
அறிவுக்கு உயிர் ஊட்டும்
பாரதி நான் பாடுகிறேன்"
"பாற்கடல் அமுதத்தை தேவர்கள் சுவைத்து
விட்டதால்தான்
எங்கள் இதழ் அமுதத்தை அரக்கர்களுக்கு
வழங்குகிறோம்

**வைரமுத்து**

- வடுகப்பட்டியைச் சேர்ந்தவர்
- ஆட்சிமொழி ஆணைய மொழிபெயர்ப்பாளராகப் பணிபுரிந்தவர்
- முதல் கவிதை 'இளநெஞ்சின் ஏக்கம்'
- வானொலியில் முதன்முதலாகப் புதுக்கவிதை பாடியவர் கவிதைத் தலைப்பு 'கண்ணீரைச் சிரிக்க விடுவோம்'
- முதல் கவிதைத் தொகுப்பு வைகறை மேகங்கள் என்ற மரபுக் கவிதை நூல்
- கவியரசு, கவிப் பேரரசு பட்டம் பெற்றவர்.

**நூல்கள்**

- வைகறை மேகங்கள் – மரபுக் கவிதை
  கவிராஜன் கதை – புதுக்கவிதையில் பாரதி வரலாறு
  தண்ணீர் தேசம் – புதுக்கவிதை நாவல்
  திருத்தி எழுதிய தீர்ப்புகள், இன்னொரு தேசிய கீதம், கொடி
  மரத்தின் வேர்கள், என் மௌனத்தின் சப்தங்கள்
- இதுவரை நான் – கவிதையில் தன் வரலாறு
- 28 வயதில் தன் வரலாறு எழுதியவர்

- கல்வெட்டுகள், கேள்வியால் ஒரு வேள்வி - உரைநடை
- வானம் தொட்டுவிடும் தூரந்தான், கரிசல்காட்டு இதிகா
மீண்டும் என் தொட்டிலுக்கு- நாவல்கள்

மேற்கோள்

“என்ன தந்ததாம்
இந்த சுதந்திரம்
அப்பனின் திருவோட்டை
புத்திரனுக்கு
இது புதுப்பித்துத் தந்தது
வெளிநாட்டான் இட்ட
விலங்கை உருக்கி
உள்ளூர் விலங்குகள்
உற்பத்தி செய்தது”
“சில ஆண்களின்
ஆரோக்கியம் இல்லாத பார்வைகள்
கம்பளிப் பூச்சியாய்
என் முதுகில் ஊரும்”

## கந்தர்வன்

**கந்தர்வனின்** இயற்பெயர் நாகலிங்கம். இராமநாதபுரம் மாவட்டம், சிக்கல் என்னும் ஊரைச் சார்ந்தவர். கணேசன், கனகம்மாள் ஆகியோருக்குப் பிறந்தவர். 29 வயதில் அரசுப்பணிக்கு வந்த கந்தர்வன் தொழிற்சங்கவாதியாகத் தீவிரமாக இயங்கியவர். அவசரநிலை காலத்தில் 19 மாதங்கள் வேலையிழந்து பின்னர் மீண்டும் பணியேற்றவர். **70-களின்** தொடக்கத்தில் உருவான மக்கள் எழுத்தாளர் சங்கத்தைத் தோற்றுவித்தவர்களில் ஒருவர். பின்னர் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் துணைத்தலைவராகித் தம் இறுதிக்காலம் வரை பங்களிப்புச் செய்தவர். எழுத்தாளர் **ஜெயகாந்தனால் "இலக்கியச் சிந்தனை"** விருதுக்குத் தேர்வு செய்யப்பட்ட இவரது **"மைதானத்து மரங்கள்"** கதை, 12-ஆம் வகுப்பு தமிழ்த் துணைப்பாட நூலில் பாடமாக இடம்பெற்றது. பல கல்லூரிகள், பல்கலைக்கழகங்களின் பாடத்திட்டத்தில் இடம்பெற்ற இவருடைய படைப்புகள் குறித்துப் பலரும் ஆய்வு நிகழ்த்தி வருகின்றனர். ஆண்டுதோறும் இவரது நினைவாகச் சிறுகதைப் போட்டி ஒன்று நடத்தப்பட்டு பரிசு வழங்கப்படுகிறது. கிழிசல்கள், மீசைகள், சிறைகள், கந்தர்வன் கவிதைகள் இவருடைய கவிதை நூல்களாகும். சாசனம், பூவுக்குக் கீழே, கொம்பன், ஒவ்வொரு கல்லாய், அப்பாவும் மகனும் ஆகியவை இவரது சிறுகதை நூல்களாகும்.

# உரைநடை இலக்கியம்

- தொல்காப்பியத்திற்கும் முன்பே தமிழில் உரைநடை இருந்
இதனை,

"பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
பாவின்று எழுந்த கிளவி யானும்
பொருளொடு புணராப் பொய்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும்
உரைவகை நடையே நான்கென மொழிப"

என்று வருவதால் அறியலாம்.

- பாட்டிடை வைத்த குறிப்பு: இராம சரிதம், பாண்டவர் சரித
சிலப்பதிகாரம் ஆகிய நூல்கள்.
- பாவின்று எழுந்த கிளவி: நூலுக்கு எழுதப்பட்ட உரைகள்
- பொய்ம்மொழி, நகைமொழி இரண்டும் கதைகள்
- "தொன்மை தானே
உரையொடு புணர்ந்த பழைமை மேற்றே"

என்று எண்வகை வனப்பில் ஒன்றான தொன்மை குறித்து
தொல்காப்பியர் கூறியுள்ளார்.

- உரையிடையிட்டப் பாட்டுடைச் செய்யுள் என்று சிலப்பதிகார
குறிக்கப்படுகிறது
- "உரையும் பாட்டும் உடையோர் சிலரே
மரையிலை போல மாய்ந்தோர் பலரே"

என்று புறநானூறு (27) கூறுகிறது

- செய்யுளுக்கும் உரைநடைக்கும் இடைப்பட்ட நடையில்
எழுதப்பட்டவை மெய்க்கீர்த்திகள்.
- அரசனின் வெற்றியையும் வீரத்தையும் கூறுவன மெய்க்கீர்த்திகள்

சிற்றிலக்கிய வகையுள் ஒன்று மெய்க்கீர்த்தி •

தொன்னூல் விளக்கம் தவிர மற்ற பாட்டியல் நூல்கள் மெய்க்கீர்த்தியைச் சிற்றிலக்கிய வகையுள் ஒன்றாகக் கூறுகின்றன.

“திருமகன் போலப் பெருநிலச் செல்வியும்
தனக்கே உரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச் சாலை கலம் அறுத்து அருளி,
வேங்கை நாடும் கங்கை பாடியும்
தடிகை பாடியும் நுளம்ப பாடியும்
குடமலை நாடும் கொல்லமும் கலிங்கமும்
முரட்டு எழில் சிங்களர் ஈழ மண்டலமும்
இரட்ட பாடி ஏழரை இலக்கமும்
முன்னீர்ப் பழந்தீவு பன்னீ ராயிரமும்
திண்திறல் வென்றித் தண்டாற் கொண்ட
தன்எழில் வளர்ஊழியுள் எல்லா யாண்டும்
தொழுதக விளங்கும் ஆண்டே செழியரைத்
தேசுகொள் கோ ராசகேசரி பன்மரான ஸ்ரீராசராச
தேவர்க்கு யாண்டு இருப்பத்தொன்பது”

என முதலாம் ராஜராஜ சோழனின் மெய்க்கீர்த்தி வருகிறது.

தமிழில் தோன்றிய முதல் உரை: இறையனார் களவியலுக்கு நக்கீரர் எழுதிய உரை; இது 10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

உரையை வளர்த்தவர்கள் சமணர்கள்

உரையை உரைநடையாக்கியவர்கள் கிறித்தவர்கள்

உரைநடையைத் தனி இலக்கியமாக வளர்த்தவர்கள் கிறித்தவர்கள்

உரைநடை என்ற வகை தோன்றிய முதல் மொழி தமிழ்

உரைநடையின் தந்தை வீரமா முனிவர். ராபர்ட்-டி-நோபிலி என்றும் சிலர் கூறுவர்.

உரையாசிரியர்கள் காலம் 13-18 நூற்றாண்டு

உரைநடை மறுமலர்ச்சிக் காலம் 19ஆம் நூற்றாண்டு

உரைநடையின் பொற்காலம் 20ஆம் நூற்றாண்டு

19ஆம் நூற்றாண்டின் ‘உரைநடை இளவரசு’ தாண்டவராய முதலியார்.

19ஆம் நூற்றாண்டின் ‘உரைநடை வேந்தர்’ ஆறுமுக நாவலர்

- இக்காலத் தமிழ் 'உரைநடையின் தந்தை' ஆறுமுக நாவலர்
- பழைய இலக்கண இலக்கியங்களுக்கு உரை எழுதி அவற்றை அழியாமல் காத்தவர்கள் உரையாசிரியர்கள்
- தமிழின் முதல் உரை ஆசிரியர் நக்கீரன்
- 'உரையாசிரியர்' என்று சிறப்பாகக் குறிக்கப்படுகிறார் இளம்பூரணர்.

## இளம்பூரணர்

- இலக்கண உரையாசிரியர்
- தொல்காப்பியம் முழுமைக்கும் முதலில் உரை கண்டவர்
- இவர் உரை 'இளம்பூரணம்' எனப்படுகிறது
- உரயைாசிரியர் என்ற சிறப்புக்கு உரியவர்
- சமணத் துறவி
- 11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்
- தந்தை மணக்குடி இளம்போதியார்
- கொங்குவேள் மாக்கதை (பெருங்கதை), திருக்குறள் ஆகியவற்றுக்கும் உரை எழுதியவர்.
- திருக்குறளுக்கு இவர் எழுதிய உரை மணக்குடவர் உரை எனப்படுகிறது என்பர்.
- 'ஐ, அம், பல் என வருஉம் பெயரல் இறுதி' என்ற தொல்காப்பிய நூற்பா ஐ – தாமரை, அம் – வெள்ளம், பல் – ஆம்பல் என்ற பேரெண்களைக் குறிக்கிறது என்று தெளிவுபடுத்தியவர்.
- இ, ஈ, ஐ–களுக்கு 'ய்' என்பதும், பிற உயிர்களுக்கு 'வ்' என்பதும் உடம்படு மெய்யாக வரும் என்று முதன்முதலாகத் தெளிவுபடுத்தியவர்
- இக்கருத்தைப் பின் வந்த நன்னூலார் தம் நூலில் அப்படியே ஏற்றுள்ளார்.
- 'தமிழ் மட்டுமே அறிந்த இளம்பூரணர்' என்று இவரை சிவஞான முனிவர் குறித்துள்ளார்.
- 'உளங்கூர் கேள்வி இளம்பூரணர்' எனப் புகழப்படுகிறார்.

## சேனாவரையர்

- இலக்கண உரையாசிரியர்
- படைத்தளபதியாகப் பணியாற்றியவர்
- தென்பாண்டி நாட்டு மாறோக்கத்தைச் (திருநெல்வேலி மாவட்டம்) சார்ந்த ஆற்றுரைச் சேர்ந்தவர் என்பர்.
- சைவ சமயம்
- 13ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர்
- வடமொழி இலக்கணப் புலமை மிக்க உரையாசிரியர்.
- தர்க்க நடையில் உரை கண்டவர்
- மாணவர்களின் வினாக்களுக்கு விடை கூறுவது போன்று உரை கண்டவர்
- இவர் தொல்காப்பியம் சொல்லதிகாரத்திற்கு எழுதிய உரை 'சேனாவரையம்' எனப்படுகிறது.
- 'சொல்லுக்குச் சேனாவரையும்' எனச் சிறப்பிக்கப்படுகிறது
- 'வடநூற் கடலை நிலைகண்டு உணர்ந்த சேனாரையர்' என்று இவரைப் புகழ்ந்தவர் சிவஞான முனிவர்.

## நச்சினார்க்கினியர்

- இலக்கணம், இலக்கியம் என்ற இரண்டிற்கும் உரை கண்டவர்
- மதுரையில் பரத்துவாச கோத்திரத்தில் பிறந்த அந்தணர்
- நச்சினார்க்கினியர் என்பது சிவனின் பெயர்களுள் ஒன்று
- நச்சர் என்று சுருக்கமாகக் குறிக்கப்படுகிறார்
- 14ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்
- திருக்குறள் உரையாசிரியர் நச்சர் என்பவர் வேறு
- திருக்குறள் உரையாசிரியர் நச்சர் என்பவர் வேறு
- தொல்காப்பியம், சீவகசிந்தாமணி, பத்துப்பாட்டு, கலித்தொகை குறுந்தொகையின் கடைசி 20 பாடல்கள் ஆகியவற்றுக்கு உரை எழுதியவர்
- குறுந்தொகை உரை கிடைக்கவில்லை
- இவர் தொல்காப்பியத்திற்கு எழுதிய உரை 'நச்சினார்கினியம்' எனப்படுகிறது
- சீவகசிந்தாமணிக்கு இருமுறை உரை கண்டார் என்பர்
- முதல் உரையை சமணர்கள் ஏற்கவில்லை என்பர்

அடியார்க்கு நல்லார்

- இலக்கிய உரையாசிரியர்
- 12ஆம் நூற்றாண்டினர்
- சிலப்பதிகாரத்திற்கு சிறந்த உரை கண்டவர்
- கானல்வரி நீங்கலாக முதல் 19 காதைகளுக்கு இவர் உ... கிடைத்துள்ளது
- மேற்கோள் பாடலின் நூற்பெயரைச் சுட்டுவது இவர... தனிச்சிறப்புகளுள் ஒன்று
- கலிங்கத்துப்பரணியை முதல் முதலாக மேற்கோள் காட்டி... உரையாசிரியர்
- முத்தமிழிலும் வல்ல ஓரே உரையாசிரியர்
- பொழிப்புரை, அருஞ்சொல் விளக்கம், மேற்கோள், இலக்க... விளக்கம் என இவர் உரை செல்கிறது

பரதம், முறுவல், சயந்தம், செயிற்றியம், குணநூல், பஞ்சமரபு... பரதசேனாபதியம், மதிவாணன் நாடகத் தமிழ் போன்ற நாடக... நூல்கள் இருந்தமையை இவர் உரையால்தான் அறிகிறோம்
இவர் உரையை முதன்முதலாக பதிப்பித்தவர் உ.வே. சாமிநாதையர்.

பரிமேலழகா

- இலக்கிய உரையாசிரியர்
- 13ஆம் நுற்றாண்டினர்
- திருக்குறள், பரிபாடல் ஆகியவற்றுக்கு உரை கண்டவர்
- திருக்குறளுக்குப் பரிமேலழகர் எழுதிய உரையே சிறந்த உரையாகப் போற்றப்படுகிறது
- "நூலிற் பாரித்த உரையெல்லாம் பரிமேலழகன் தெரித்த உரையாமோ தெளி" என்று தொண்டை மண்டல சதகம் கூறுகிறது
- பரிமேலழகர் உரை இலக்கண உரை என்றே குறிப்பிடப்படுகிறது
- வடநூற் கருத்துகளைத் தழுவியும் ஒப்பிட்டும் உரை எழுதியவர்.
- தமிழில் உள்ள உரையாசிரியர்களில் மிகவும் சிறந்தவர்
- 'திருக்குறளுக்கு இணையாகப் போற்றப்படும் உரை பரிமேலகழகர் உரை' என்று சிறப்பித்தவர் உமாபதி சிவாச்சாரியார்.